411—

தருமபுரி மாவட்டத்தில் துடுக்கன அள்ளி ஏரிக்குக் கால்வாய் வெட்ட அனுமதி வழங்குதல்

**20094—திரு கே. முனிவெங்கடப்பன்:*

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், கிருட்டிணகிரி ஒன்றியம், துடுக்கன அள்ளி ஏரிக்கு வனத் துறை நிலத்தில் கால்வாய் வெட்ட எப்பொழுது அனுமதி வழங்கப்படும்?

மாண்புமிகு திரு கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொதுப் பணித் துறை, வன நிலத்தில் கால்வாய் வெட்ட வனத் துறையிடம் அனுமதி கேட்டுள்ளது. இக்கருத்துரு வனத் துறையின் பரிசீலனையில் தற்போதுள்ளது. இது அரசினால் பரிசீலிக்கப்பட்டு வனப் பாதுகாப்புச் சட்டம் 1980–ன் கீழ் மைய அரசின் இசைவு கேட்கப்பட வேண்டும். மைய அரசின் இசைவு பெற்ற பின்னர்தான் மாநில அரசால் உரிய அனுமதி வழங்க இயலும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று இந்தக் கேள்வியைக் கேட்டு, பதில் வேறு பெற்றிருக்கிறீர்கள். ஒரு கேள்வி போதும்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அதிலே இருக்கின்ற விவசாயப் பெருமக்கள் அந்தப் பகுதியிலே விவசாயத்தை நம்பி வாழ்கின்றவர்கள். அவர்களுக்கு 1984 ஆம் ஆண்டு கட்டப்பட்ட அந்த ஏரியானது இன்னும் கால்வாய் வெட்டப்படாத காரணத்தினால் அந்த ஏரியினுடைய தண்ணீர் வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார். மத்திய அரசிடமிருந்து எப்போது அனுமதியைப் பெற்றுத் தருவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செயற்குறிப்பு இப்போது ஹோசூர் மாவட்ட துணை

1994 ஏப்ரல் 27]

அலுவலர் அவர்களின் பரிசீலனையில் உள்ளது. விரைவிலே இது மத்திய அரசினுடைய அனுமதிக்கு அனுப்பப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றுவேறு கேட்டீர்கள். இதே தான் அதுவும்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வனத் துறையானது அனுமதி கொடுத்து இது பொதுப் பணித் துறையால் நிறைவேற்றப்பட வேண்டும். அல்லது பொதுப் பணித் துறையிலிருந்து பணம் பெற்றுக்கொண்டு வனத் துறையே இந்தக் காரியத்தை செய்து கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய அனுமதியைப் பெறாமல் நம்முடைய தமிழக அரசினுடைய வனத் துறை இதைச் செய்ய இயலாது. எனவே மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய முடியும். வனம் சாரா எந்தப் பணிக்குமே மத்திய அரசினுடைய அனுமதியைக் கோராமல், பெறாமல் செய்ய இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே மத்திய அரசுக்கு இதைப் பரிந்துரை செய்து அனுப்பி அதனுடைய அனுமதியைப் பெறுவதற்கு மாநில அரசு முயற்சியை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 412, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

412—

வனப் பகுதிகளில் சோதனைச் சாவடிகள் அமைத்தல்.

23338—திருமதி கே. மரியம் உல் ஆசியா:***

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காடுகள் அழிக்கப்படுவதைத் தடுக்க அனைத்து வனப் பகுதிகளிலும் சோதனைச் சாவடிகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,